**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், கார்த்திகை திங்கள் 5ம் நாள்**

<u>இடைக்கால மனு எண். 640/2025</u>
இன்
<u>அசல் வழக்கு எண். 228/2019</u>

பழனிச்சாமி ..மனுதாரர்/பிரதிவாதி

..எதிர்..

1. சக்திவேல்
2. தண்டபாணி
3. பெரியசாமி
4. நாராயணன்
5. பிரியா ..எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு கடந்த 11.11.2025ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.செங்கோடவன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஜெகதீஸ் அவர்கள் முன்னிலையாகியும், மனு மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>**உத்தரவு**</u>

உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 26 விதி 9ன் கீழ் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை மீண்டும் நிலஅளவையரின் உதவியுடன் மீண்டும் பார்வையிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>** :

**2.1** மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் வாதி, மனுதாரரின் உடன் பிறந்த சகோதரி அமிர்தம்மாளின் வாரிசு ஆவார். கடந்த 29.11.1982ம் தேதி மனுதாரரின் தாயார் மனுதாரருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார். அதேபோல் மனுதாரரின் சகோதரி அமிர்தம்மாளுக்கும் தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்துள்ளார். அமிர்தம்மாள் காலமான பின்பு அவரது வாரிசுதாரர்களான 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரி கலைவாணியும் அவரது தாயார் பெயரில் இருந்த சொத்தை பாகம் பிரித்துகொண்டார்கள்.

**2.2** 29.11.1998ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் தாவா தடம் குறித்து சொல்லப்பட்டுள்ள ஷரத்துக்களை அவ்வாறே அளக்காமல் வாதி அவருக்கு சாதகமான விபரத்தை கொண்டு நீதிமன்ற ஆணையரை நியமித்து சொத்துக்களை அளந்துள்ளார். 1ம் வாதியின் தாயார் அமிர்தம்மாளின் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்டுள்ள வழித்தடத்தினை நீதிமன்ற ஆணையர் மற்றும் நில அளவையரின் உதவியுடன் அளந்தால் தான் உண்மை நிலவரம் தெரியவரும். எனவே, வழக்கு சொத்தினை நீதிமன்ற ஆணையர் மற்றும் நிலஅளவையர் மீண்டும் பார்வையிட்டு, ஆய்வு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>1ம் எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 5ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>** :–

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு இ.ம.எண்.796/2019ல் ஏற்கனவே விரிவான அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தகுந்த காரணம் இன்றி, சூழ்நிலை மாற்றம் இன்றி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். உரிமையியல் நடைமுறை சட்டம், பிரிவு 11ன் கீழ் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. புதிய வழக்கு மூலம் ஏதும் இன்றி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், அதன் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், மனுதாரர்கள் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்.

**6. <u>தீர்வு</u> :**

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், தாவா சொத்தை ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்திருந்தாலும் அதனை நிலஅளவையர் மூலம் அளவீடு செய்யவில்லை என்றும், தாவா சொத்து விபரத்திலும், தானசெட்டில்மெண்ட் பத்திரத்திலும் சொத்து விபரங்கள் தவறாக உள்ளதால் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை மீண்டும் பார்வையிட்டால் தான் வழித்தடம் எது என்ற விபரம் தெரியவரும் என்றும், வா.சா.ஆ.1ல் உள்ள வழித்தடமும், தாவா சொத்து விபரத்தில்

குறிப்பிட்டுள்ள வழித்தடமும் வெவ்வேறு என்றும், வாதி கூறியுள்ள வழித்தடத்தில் பிரதிவாதி உள்ளார் என்றும், எனவே, தாவா சொத்தை நிலஅளவையரின் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் மீண்டும் பார்வையிட அனுமதி வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், கடந்த 19.08.2019ம் தேதியன்றே தாவா சொத்து நீதிமன்ற ஆணையரால் மனுதாரர்/பிரதிவாதிக்கு அறிவிப்பு வழங்கிய பிறகு பார்வையிடப்பட்டுள்ளது என்றும், ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை நீக்கறவு செய்வதற்கு மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்வில்லை என்றும், அசல் வழக்கில் வழக்கு விசாரணையில் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், விடுபட்ட சங்கதிகளை நிரப்புவதற்காகவும், சாட்சியங்களை சேகரிப்பதற்காகவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யும்மாறு வாதிட்டார்.

**6.3** அசல் வழக்கானது தாவா வண்டிப்பாதையில் மனுதாரர்/பிரதிவாதி கம்பிவேலி அமைக்ககூடாது என்றும், அதில் உள்ள எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் சுவாதீனத்தை இடையூறு செய்யக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.4** இ.ம.எண்.796/2019ல் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு ஏற்கனவே அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கையானது கடந்த 08.12.2022ம் தேதியன்று நீ.ம.சா.ஆ.1 ஆக அசல் வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இருதரப்பு

சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்தை மீண்டும் நிலஅளவையரின் உதவியுடன் பார்வையிட வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.5** அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளார்களே தவிர, தாவா சொத்து பொறுத்து செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரவில்லை. இ.ம.எண்.796/2019ல் தாக்கல் செய்யப்பட்டு நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கையே அசல் வழக்கில் தரப்பினர்களுக்கு உள்ள பிரச்சனையை தீர்ப்பதற்கு உகந்ததாக இருக்கும் என்பதால், நிலஅளவையரின் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை மீண்டும் பார்வையிட வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு செய்து, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**,

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் நாள் அவையறிய பகரப்பட்டு, இன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.21 15:47:09 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.21 15:47:16 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருப்பூர்.